**மாகம்புற துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனி – 2016**

---

மாகம்புற துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்காக பகிரங்க தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்று எனக்கு உதவியது. கம்பனிக்குரிய விரிவான அறிக்கையொன்று கம்பனியின் தலைவருக்கு 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

# 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக மாகம்புற துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிறுவனத்தின் தொடர்ந்திருத்தல்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நட்டம் ரூபா 1,960,685,373 ஆக இருந்ததுடன், இதன் காரணமாக அத்திகதியில் உள்ளவாறு கம்பனியின் தேறிய சொத்துக்கள் ரூபா 1,885,685,373 மறைப் பெறுமதியை கொண்டிருந்தமையால் அத்திகதியில் கம்பனி கடுமையான மூலதன நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்தது. அதன் பிரகாரம், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் 20 தினங்களுக்குள் பங்கு உரிமையாளர்களின் அதிவிஷேட பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக அறிவிக்க வேண்டிய போதிலும், பணிப்பாளர் சபை அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கு தவறியிருந்தது. எனினும், கம்பனி தனது நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போதும் சமர்ப்பிக்கும் போதும் தொடர்ச்சியாக நிலைத்திருக்கும் என்ற எடுகோளின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், தொடர்ந்தும் தாய் நிறுவனமான இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதிசார் உதவி அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கும் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கும் என வழங்கப்பட்டமைக்கான உறுதிப்படுத்தலொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

**இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் ரூபா 2,931,386,743 தொகையான கடன், நடைமுறை மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டு நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. நியமத்தின் பிரகாரம், நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படுமாயின் கம்பனியின் தேறிய சொத்துக்கள் மறைப் பெறுமதியாக இருக்கும். மேலும், இக்கடன் மீதிக்காக வங்கியிலிருந்து மீதி உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) துறைமுக தளத்தில் 07 நாட்களுக்கு மேற்பட்ட காலம் நிறுத்தப்பட்டிருந்த 243 வாகனங்களுக்குரிய அறவிடவேண்டிய நில வாடகையான ரூபா 197,888,250 தொகையினை அறவிடுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், அதில் கம்பனிக்கு கிடைக்க வேண்டிய 40 சதவீதமான பங்கு பெறவேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த அறவிடுதல் நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்ற ரூபா 25.7 மில்லியன் தொகையான பெறவேண்டிய டக் படகு இழப்பீட்டுத் (Tug Claim Receivable) தொகைக்காக மூன்றாம் தரப்பினர் மீதி உறுதிப்படுத்தல் கிடைக்கப்பெறாதிருந்ததுடன் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இழப்பீட்டு நட்டத்திற்காக (Impairment Loss) நிதி ஏற்பாடும் நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐஎப்ஓ 380 (IFO 380) மற்றும் எம்ஜீஓ (MGO) என்ற இரண்டு எண்ணெய் வகைகளின் புத்தகங்களில் காண்பிக்கப்படுகின்ற இருப்பு மீதியினதும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையினதும் பிரகாரம் பௌதீக மீதிகளுக்கிடையே முறையே 1,264 மற்றும் 1,647 மெட்ரிக் தொன்கள் என வேறுபாடுகள் காணப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே குறிப்பிடப்படுகின்ற ஒவ்வொரு விடயங்களுக்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவற்றைத் திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்துவதற்கோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| 01. | கப்பல் எண்ணெய் இருப்பு பதிவழித்தல் | 585,496,943 | பணிப்பாளர் சபை தீர்மானம் |
| 02. | உள்ளக இணைப்பு கொங்கிறீட் துண்டம் (Interlock Concrete Blocks) | 1,761,247 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| 03. | கொங்கிறீட் கல் | 3,989,926 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| 04. | எரிபொருள் இருப்பு | 2,658,595 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| நிதிப்பிரமாணம் 396 | வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய 06 மாதங்களை விஞ்சிய ரூபா 118,389 பெறுமதியான 04 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| **(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | |
| (i) 5.1.1 ஆம் பிரிவு | சகல பொது முயற்சிகளினாலும், கூட்டிணைந்த திட்டமொன்று (Corporate Plan) தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனி அவ்வாறான திட்டமொன்றைத் தயாரித்திருக்கவில்லை. |
| (ii) 5.1.2 ஆம் பிரிவு | சகல பொது முயற்சிகளினாலும் கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க செயல்நடவடிக்கைத் திட்டமொன்று (Action Plan) தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனி அவ்வாறான திட்டமொன்றைத் தயாரித்திருக்கவில்லை. |
| (iii) 7.2 ஆம் பிரிவு | நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சூழலில் பிரதான அங்கமாக சகல பிரதான செயற்பாடுகளையும் மேவுகை செய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட செயற் கைநூல் (Procedure Manual / System) தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி அவ்வாறான செயற் கைநூலொன்றைத் தயாரித்திருக்கவில்லை |
| (iv) 7.4.1 ஆம் பிரிவு | கணக்காய்வுக் குழு கூட்டப்பட்டு உள்ளகக் கணக்காய்வில் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் செயல்நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்குரிய சிபாரிசு வழங்க வேண்டியிருந்த போதிலும், கம்பனியால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் கணக்காய்வுக் குழுக் கூட்டமும் நடாத்தப்படவில்லை. |

(v) 8.5 ஆம் பிரிவு

மாகம்புற துறைமுக வளவில் அமைந்துள்ள ரூபா 9,744,499,541 பெறுமதியான எண்ணைய்த் தாங்கி தொகுதியின் சேதமாதல் ஆபத்தை குறைப்பதற்காக காப்புறுதி மேவுகை பெறப்பட்டிருக்கவில்லை. எண்ணெய்த் தாங்கித் தொகுதியின் உரிமையாளர் துறைமுக அதிகாரசபையாக இருந்தபோதிலும், துறைமுகம் முகாமைத்துவ கம்பனியாக மாகம்புற துறைமுக முகாமைத்துவக் கம்பனி இது தொடர்பாக கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(vi) 9.3.1 ஆம் பிரிவு

சகல பொது முயற்சிகளினதும் சகல பதவிகளுக்காகவும் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று (Shemes of Recruitment) தயாரிக்கப்பட்டு அதற்காக வரிசை அமைச்சின் அங்கீகாரமும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடும் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனியால் அவ்வாறான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து உரிய தரப்பினரிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் கம்பனியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 535 மில்லியன் நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 449 மில்லியன் ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 86 மில்லியனால் அதிகரித்திருந்தது. இதற்காக ரூபா 585,496,943 தொகையான கப்பல் எண்ணெய் இருப்பின் இழப்பு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 3 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 7,991,434 தேறிய இலாபமாக இருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டிருந்தது. நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 27,657,651 சாதகமான பங்களிப்பொன்று ஏற்பட்டிருந்தது. எனினும், 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும், பங்களிப்பு மறைப்பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது முறையே ரூபா 763,106,656 தொகை, ரூபா 28,954,245 தொகை மற்றும் ரூபா 94,343,252 ஆக இருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

2015 ஆம் ஆண்டின் போது தேறிய இலாப விகிதம் 29 சதவீத மறைப் பெறுமதியாக இருந்ததுடன் அது 2016 ஆம் ஆண்டின் போது 66 சதவீத மறைப் பெறுமதி வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் கம்பனியின் இலாபத் தன்மை மற்றும் வினைத்திறன் என்பன மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கம்பனி தாபிக்கப்பட்டிருந்தது.

(அ) இலங்கை துறைமுக அதிகாரசபை, கம்பனிக்கு காலத்திற்கு காலம் கையளிக்கப்படுகின்ற கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல், மகம்புற துறைமுக முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஆ) நவீன சர்வதேச கடற் துறைமுகமாக அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல்.

(இ) அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ துறைமுக எல்லையில் கைத்தொழில் வலயமொன்றினை ஏற்படுத்துதல்.

(ஈ) கப்பல்களுக்கு கப்பல் எண்ணெய், நீர் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல்.

எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட நோக்கங்களுக்கிடையே அம்பாந்தோட்டை துறைமுக எல்லையில் கைத்தொழில் வலயமொன்றை ஏற்படுத்துதல் பிரதான நோக்கமாக இருந்தபோதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

கம்பனியின் அகவிதியில் (Articles of Association) குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்குரித்தற்ற செயற்பாடான உள்ளக இணைப்பு கொங்கிறீட் கொட்டகை (Interlock Blocking) மற்றும் கல் உடைக்கும் இயந்திரம் (Crusher) கையாளல் நடவடிக்கைகள் கம்பனியால் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. அந்த செயற்பாடுகளில் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 5,375,253 மொத்த நட்டமும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 4,149,757 மற்றும் ரூபா 753,558 மொத்த இலாபமும் உழைக்கப்பட்டிருந்தது.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது எண்ணெய் கையாளல் வருமானம் ரூபா 9,605,884 மாத்திரமாக இருந்ததுடன், உரிய காலத்தில் ரூபா 585,496,943 இனால் இருப்பின் பெறுமதி குறைவடைந்தமை, கப்பல் எண்ணெய் செயற்பாடுகளுக்கான நேர்ச் செலவினம் ரூபா 30,537,384 ஆக இருந்தமை, கடன் வட்டி ரூபா 119,395,460 செலுத்தியமை மற்றும் நிர்வாகச் செலவினம் மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 116,258,416 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 851,688,203 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது 842,082,319 தேறிய நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், கப்பல் எண்ணெய் விற்பனை ஆரம்பிக்கப்பட்ட 2014 ஏப்ரல் 25 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எண்ணெய் விற்பனைக்குரிய கையாளல் நடவடிக்கைகளின் மூலம் ரூபா 2,718,638,138 ஒட்டுமொத்த செயற்பாட்டு நட்டம் ஏற்பட்டிருந்தது. கையிலுள்ள கப்பல் எண்ணெய் இருப்பு 10,419 தொன்களாக காணப்படும் போது 7,368 தொன் இருப்பொன்று கொள்வனவு செய்யப்பட்டு அவற்றை விற்பனை செய்யாமல் காணப்பட்டமையின் காரணமாக மொத்த கப்பல் எண்ணெய் இருப்பு இழப்பீட்டு நட்டம் அதிகரித்தமை செயற்பாட்டு நட்டம் அதிகரித்தமைக்கு பிரதான காரணமாக இருந்தது. எனினும், 2016 ஆம் ஆண்டின் போது துறைமுகத்தின் எண்ணெய் கையாளல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

(ஆ) மாகம்புற துறைமுக முகாமைத்துவக் கம்பனியால் அரசாங்க கணக்காய்விற்கு 2016 யூலை 20 ஆந் திகதிய GM/MPMC/399 ஆம் இலக்க கடிதத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பிரகாரம் 2016 யூன் 30 இல் உள்ளவாறு மெறய்ன் கேஸ் (MGO) 14,582 மெட்ரிக் தொன் அளவான எண்ணெய் இருப்பு காலம் கடந்தமையினால் நிறத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அந்த எண்ணெய் இருப்பினை விற்பனை செய்த போது பிரச்சினைகள் ஏற்பட முடியுமாக இருந்ததுடன் நட்டமும் ஏற்படக்கூடியதாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

1879 இன் 35 ஆம் இலக்க சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (திருத்தப்பட்ட 235 ஆம் அதிகாரம்) 69 மற்றும் 135 ஆவது பிரிவுகளின் பிரகாரம் தற்போது களஞ்சியத்தில் காணப்பட்ட கப்பல் எண்ணெய் இருப்பு தொடர்பாக சுங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிப் பொறுப்புகளுக்குரிய ரூபா 220 மில்லியன் தொகையான வங்கிப் பிணையொன்று மிக விரைவாக சுங்கத்திற்குச் சமர்ப்பிக்குமாறு மகாம்புற துறைமுக முகாமைத்துவக் கம்பனிக்கு அறிவித்திருந்த போதிலும், அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக இலங்கை சுங்கத்தினால் மகாம்புற துறைமுக முகாமைத்துவக் கம்பனியின் பொது முகாமையாளருக்கு விலாசமிடப்பட்ட 2016 பெப்ரவரி 02 ஆந் திகதிய INDS/PRJ/0004/2016 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிணையொன்று சமர்ப்பிக்கப்படாமல் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் எண்ணெய் இருப்பை பேணிச் சென்றமை, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 135 ஆம் பிரிவு மீறப்பட்டதாகக் காண்பித்து தடைசெய்தல் கட்டளையொன்று விதிக்கப்பட்டு ரூபா 1,975,057,705 பெறுமதியான கப்பல் எண்ணெய் 17,210 மெட்ரிக் தொன்கள் அனுமதியற்ற வகையில் பேணிச் சென்றமை தொடர்பாக சுங்கப் புலனாய்வொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

2015 ஆம் ஆண்டின் போது துறைமுக முகாமைத்துவக் கம்பனியால் கப்பல் எண்ணெய் கையாளல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்த சொத்துக்களின் பெறுமதியான ரூபா 9,744,499,541 இனால், 71.7 சதவீதமான ரூபா 6,987,638,384 பெறுமதியுடைய 09 எண்ணெய் தாங்கிகள் மற்றும் அதற்குரிய மேடை முறைமை என்பன எண்ணெய் விற்பனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட திகதி முதல் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மாகம்புற துறைமுக முகாமைத்துவக் கம்பனியின் நிறுவனக் கட்டமைப்பில் (ஊழியர் எண்ணிக்கை) உள்ளடங்காத பிரதி பொது முகாமையாளர் (எண்ணெய் குத நடவடிக்கை) பதவியொன்று ஏற்படுத்தப்பட்டு கப்பல் எண்ணெய் கையாளல் நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்காக 2013 திசெம்பர் 02 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் மதியுரையாளர் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த மதியுரையாளரின் சேவையினைப் பெற்றுக்கொள்ளல் 2015 திசெம்பர் 18 ஆந் திகதிய முகாமைத்துவ பணிப்பாளரின் கடிதத்தின் மூலம் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் 2016 சனவரி 20 ஆந் திகதி சேவை நிறுத்தப்படும் சந்தர்ப்பம் வரை சம்பளம் மற்றும் படிகளாக கூட்டுமொத்தமாக ரூபா 19,837,500 தொகையும், எரிபொருள் மற்றும் அதிவேக வீதிக் கட்டணத்துடன் வாகன வசதிகளை வழங்குவதற்காக ரூபா 989,483 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 20,826,983 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு மதியுரைச் சேவை பெறப்பட்ட காலப்பகுதியில் கப்பல் எண்ணெய் கையாளல் நடவடிக்கைகள் மூலம் ரூபா 1,876,555,819 நட்டம் பெறப்பட்டமையின் காரணமாக அந்தச் சேவைக்காக செலவிடப்பட்ட செலவினம்

சிக்கனமற்ற செலவினமாக இருந்தமையை கணக்காய்வின் போது புறக்கணிக்கப்பட முடியாதிருந்தது. மேலும், அந்த மதியுரையாளரால் சேவையை கைவிட்டுச் சென்றமைக்கு எதிராக ரூபா 100 மில்லியன் இழப்பீடொன்று கோரி கம்பனிக்கு எதிராக வழக்கொன்றும் தொடுக்கப்பட்டிருந்ததுடன் தற்போது அது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 சுற்றாடல் மற்றும் சமூகப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது உடைத்து அகற்றப்பட்ட கருங்கல் மற்றும் மண் என்பன இடைக்கிடையே வைக்கப்பட்டிருந்ததுடன் துறைமுக வளவில் நீர் ஒன்று சேருகின்ற முறையில் குழிகளும் உருவாகியிருந்தது. மேலும், துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கைப்பற்றப்பட்ட காணிகளில் உடைத்து போடப்பட்ட கட்டிட இடிபாடுகளின் பகுதியும் எஞ்சியிருந்தன. இது தொடர்பாக அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தின் மூலம் 2017 பெப்ரவரி 08 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட HDS/LND/12/F/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அம்பாந்தோட்டை பிரதேசத்தில் நிலவுகின்ற மழை நிலமையினால் இந்தக் காணியில் டெங்கு அபாய வலயமாக அதிகரித்து வருவதாக பொது சுகாதார பரிசோதகரினால் இனங்காணப்பட்டமையும் இந்த பிரச்சினையான நிலைமைக்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் துறைமுக அதிகார சபை அறிவித்திருந்தது. இது தொடர்பாக 2017 பெப்ரவரி 06 ஆந் திகதிய SPD/H/02/09 ஆம் இலக்க துறைமுக அதிகார சபையின் கடிதத்தின் மூலம் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாகம்புற துறைமுக முகாமைத்துவக் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தவறியிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பதவியணியினர் முகாமைத்துவம் | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாமை. |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றைத் தாபித்து உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | இருப்புக் கட்டுப்பாடு | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்புக்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) | சொத்துக்களின் நிர்வாகம் | குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்காமை. |